மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) இப்பொருள் பற்றிய கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: ஒரு பிரிவு ஆசிரியர்களுக்கு அளிக்கப் படுகின்ற சலுகைகள் அதே ஆசிரிய சமுதாயத்திலுள்ள மற்றொரு பிரிவு ஆசிரியர்களுக்கு அளிக்கப்படாத நடைமுறைச் சிக்கல்கள் இன்றைய தினம் இருப்பதால், இனிமேலாவது பிறப்பிக்கப்படும் ஆணைகள் எல்லாம் ஆசிரிய சமுதாயத்திலுள்ள அனைத்துப் பிரிவின ருக்கும் பொருந்துகின்ற வகையில் வெளியிடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதுபற்றி நேற்றே நான் பதில் சொல்லும்போது, இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுகின்ற காரணத்தையும் சொன்னேன். அந்த அடிப்படையில் இதுவும் பரிசீலிக்கப்படும்.

Part-final withdrawals from Provident Fund Amounts.

* 76 *Q.*—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether, as per G.O. Ms. No. 1189, Finance (Funds), dated 4th September 1974, teachers are eligible for sanction of Part-final withdrawals from their Provident Fund amounts; and

(*b*) if so, the reasons for not extending this concession to the Local Body employees?

வருங்கால வைப்பு நிதியிலிருந்து பகுதி இறுதிக் கணக்காகத் தொகை வழங்குதல்.

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நிதித் துறையின் (நிதிகள்) 4-9-1974 ஆம் நாளிட்ட 1189 ஆம் எண் அரசாணையின்படி ஆசிரியர்கள், தங்கள் வருங்கால வைப்பு நிதியிலிருந்து பகுதி இறுதிக் கணக்காகத் தொகை வழங்கப் படுவதற்கு தகுதியுடையவர்களாவார்களா?

(இ) ஆமெனில், இச்சலுகையை உள்ளாட்சி மன்றப் பணி யாளர்களுக்கும் நீட்டிக்காததற்கு காரணம் யாது?

[1978 செப்டம்பர் 12

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) & (இ) ஆம். அரசு அலுவலர்கட்கு மட்டுமே பொருந்துவதாக உள்ள இந்த ஆணையை உள்ளாட்சி அலுவலர்களுக்கும் பொருந்தும் வகையில் 7-3-78ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதன்படி 15 ஆண்டுகள் பணிக்காலம் முடிந்த ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் தங்கள் வைப்புத்தொகை இருப்பிலிருந்து பகுதி இறுதிக் கணக்காக பணத்தை எடுக்க அனுமதிக்கப்படுவர்.

திரு. க. அறிவழகன்: வருங்கால வைப்பு நிதியிலிருந்து கடனாக எத்தனை சதவீதம் அவர்கள் எடுத்துக்கொள்ள முடியும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அதற்கு என்று தனியாக விதிகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அந்த விதிகளின்படி அவர்கள் பணம் எடுத்துக்கொள்ளலாம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: வருங்கால வைப்பு நிதியிலிருந்து பகுதி அல்லது இறுதிக் கணக்காகத் தொகை பெறுவதற்கு என்று சில விதிகள் இருக்கின்றன என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் சொன்னார்கள். திருமணம், வீடு கட்டுதல் அல்லது புதுப்பித்தல் போன்ற காரணங்களைக் காட்டினால் தான் பணம் பெற முடியும் என்று அந்த விதிகளில் கூறப்பட்டிருக்கிறது. இப்படி இந்த விதியில் இருப்பதால், சிலர் பொய்யான காரணங்களைச் சொல்லிக்கூட பணத்தைப் பெற வேண்டிய நிலைகளுக்கு ஆளாகிறார்கள். இவ்வாறு விதிகளிலுள்ள குறைபாடுகளைப் போக்கும் வகையில் ஆசிரியர்கள் உண்மையான காரணத்தைக் காட்டி வைப்பு நிதியிலிருந்து பணத்தைப் பெறலாம் என்ற வகையில் அரசு ஆணையிடுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: விதிகள் என்பது மிகவும் அவசியம் தேவை. ஆசிரியர்களுடைய பிற்கால நல்வாழ்வுக்கு என்று தான் அந்தத் தொகை பிடிக்கப்படுகிறது. அந்த விதிகளை அவர்கள் பின்பற்ற வேண்டும்.

திரு. க. அறிவழகன்: விதிகள் இருக்கின்றன என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்த விதியில் காதணி விழாவுக்குக் கடன் பெற்றுக்கொள்ளலாம் என்று இருக்கிறது. சுயமரியாதை இயக்க காலத்திற்குப் பிறகு, இப்போது அது பழக்கத்தில் அதிகமாக இல்லை. நியாயமான காரணங்கள் எவையெவையோ அவையெல்லாம் அந்த விதிகளில் இடம் பெற்றிருக்க வேண்டும். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் தலை ஆட்டுகிறார்கள் (உறுப்பினர்கள் அனைவரும் சிரிப்பு). இன்னும் காதணி விழாக்களைச் சில பேர் செய்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்கிறார்கள். பல பேர் செய்யாத

1978 செப்டம்பர் 12]

வர்களாக இருக்கிறூர்கள் என்பது தான் என் கருத்து. என்ன காரணத்திஞல் 30 ஆண்டுகளுக்கு முன்ஞல் அக்கவுண்ட்ஸ் துறையில் இருந்தவர்கள் நினைத்தார்களோ அப்படி எழுதி வைத்திருக்கிறூர்கள். புதிதாக விதி மாற்றியமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: எந்த விழாக்களுக்கு எல்லாம் வைப்பு நிதியிலிருந்து பணம் தேவை என்பதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தால், அவைகளை விதிகளில் சேர்த்துக்கொள்ளலாம்.

திரு. க. மீஞட்சிசுந்தரம்: வைப்பு நிதியிலிருந்து ஆசிரியர்கள் பணம் கேட்டால், "கருத்தடை செய்ய ஆள் கொண்டு வா, அப்படிக் கொண்டு வந்தால்தான் சேங்ஷன் செய்வோம்" என்று சொல்லுகிறூர்கள். வருங்கால வைப்பு நிதியிலிருந்து பகுதி அல்லது இறுதிக் கணக்குத் தொகை கேட்டு விண்ணப்பித்தால், இப்படிப்பட்ட வேலைகளை ஆசிரியர்களிடம் சொல்லக் கூடாது என்ற வகையில் அரசு கண்டிப்பாக உத்தரவு பிறப்பிக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அதுமாதிரி எங்காவது வற்புறுத்துவதாக புகார் வந்தால், நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: அந்தந்தப் பள்ளிக் கூடங்களிலேயே வருங்கால வைப்பு நிதியிலிருந்து கடன் தொகையை ஆசிரியர்கள் பெறத்தக்க வகையில் தலைமையாசிரியர்களுக்கு அதிகாரங்கள் வழங்க மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: ஊராட்சி ஒன்றியங்கள் தான் அதுபற்றிப் பரிசீலிக்க வேண்டும்.

Labour Welfare Officers

* 77 *Q.*—THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to designate all the Labour Welfare Officers working in the factories in Tamil Nadu as Government Officers; and

(*b*) if so, the number of such officers who will be designated under this scheme?